REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 12உ வியாழன் (26—5—55) ★ ★ வெளியீடு: வைகாசி 13உ வெள்ளி (27—5—55) [இதழ் 295

ஜனநாயகப் பரீட்சை!

சென்னை சிறப்புக் கூட்டத்தில் அண்ணா விளக்கம்

"தி மு கழகம் ஒரு பெரும் ஜனநாயகப் பரீட்சை நடத்திக் கொண்டிருக்கிறது; 'ஜனநாயகத்தின் முழு அம்சங்களும் நடைமுறையில் அமுல் செய்யப்பட வேண்டும்,' என்று கழகம் விரும்புகிறது.

"அதன் விளைவாகத்தான் கழகத்திற்குப் புதிய பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்கவும்)

'தினத்தந்தி' போக்குக்கு கண்டனம்

ம. சோ. கட்சியில் பிளவும் - பூசலும்!

தலைமை முடிவுக்கு எதிராக உ. பி. குழு தீர்மானம்

ஜூன் 11-ந் தேதியிலிருந்து 13-ந் தேதி வரையில் உத்திர பிரதேச மக்கள் சோஷலிஸ்ட் கட்சி மாநாடு நடைபெற இருக்கிறது. அம்மாநாட்டைத் துவக்கி வைப்பதற்காக, ம. சோ. கட்சி தலைமை சங்கத்தால் விலக்கி வைக்கப்பட்டுள்ள மாது லிமாயியை, உத்திர பிரதேச ம. சோ. செயற் குழு தேர்ந்தெடுத்திருக்கிறது.

மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாக, லிமாயியை நியமிப்பது, உத்திர பிரதேச ம. சோ. கட்சியின் செயற் குழுமீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துத் தீரவேண்டிய கட்டாயத்தை, கட்சித் தலைமைக்கு ஏற்படுத்திவிடும் என எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

பொய்யுரை வெளியிடும் போக்கைப் போக்கிட!

வழக்கு மன்றம் செல்ல எண்ணம்

மதியழகன் அறிவிப்பு

"சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தி. க.—தி. மு க. இணைப்பு முயற்சி பற்றி அண்ணா பேசும்போது—தி. க. 'தாடிக் கழகம்'—என்று குறிப்பிட்டதாக ஒரு வடிகட்டின பொய், 'தினத் தந்தி'யில் வெளிவந்திருக்கிறது.

"இத்தகைய பொய்யுரைகளை வெளியிடும் 'தினத் தந்தி'யின் போக்கை, மக்கள், பலதடவை கண்டித்திருக்கிறார்கள்; என்றபோதிலும், 'தினத் தந்தி'யின் போக்கு மாறுவதாகக் காணோம்.

"அன்று, கூட்டத்துக்கு நான் தலைமை வகித்திருந்தேன்; 'தாடி' என்ற சொல்லை அன்று யாராலும் கூறப்படவில்லை.

"அன்றைய கூட்டத்தின் சொற்பொழிவுகள் அனைத்தும் ஒலிப் பதிவு செய்யப்பட்டு தோழர் கண்ணதாசனிடம் இருக்கிறது.

"'தினத் தந்தி' அதிபர் தோழர் ஆதித்தன் அவர்களை, அந்த ஒலிப்பதிவைக் கேட்க வரும்படி அழைக்கிறேன். அதைக் கேட்டாலாவது, 'தன் பத்திரிகை எவ்வளவு மட்டரகமான முறையில், பொய்யுரைகளை வெளியிட்டு அருவருப்பான நிலையை அடைகிறது,' என்பதைத் தெரிந்துகொள்ளலாம்; அதன் பயனாகத் திருந்த முயற்சிக்கலாம்.

"ஏதேனும் ஒரு கட்சியில் கலந்து பணியாற்றும் பொறுப்பு தோழர் ஆதித்தன் அவர்களுக்கு இல்லாததாலேயே, 'கண்டபடி' செய்திகளை வெளியிடும் கண்ணியமற்ற போக்குடன் 'தினத் தந்தி' இருக்கிறது.

"துளியாவது பொறுப்புணர்ச்சி இருக்குமானால், 'தினத் தந்தி' இந்த என் மறுப்புரையை வெளியிடும்.

"அன்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட பல நண்பர்கள், 'எவ்வளவுதான் பொறுப்புணர்ச்சி—பொதுவாழ்வுத் துறையின் மாண்பு—பண்பு ஆகியவை பற்றிப் போதனை தந்தாலும், 'தினத் தந்தி' திருந்தாது; வழக்குத் தொடுப்பது ஒன்றுதான் இதற்குத் தகுந்த பரிகாரம்,' என்று வற்புறுத்தி இருக்கிறார்கள்.

"ஒரு கழகத்தைக் கட்டிக்காத்துவரும் கடமையில் ஈடுபட்டிருக்கும் நாம், இந்தக் காரியமும் கவனிக்க வேண்டி வருகிறதே என்று கவலைப்படுகிறேன். எனினும், 'தினத் தந்தி'யின் போக்கு, நாம் வழக்கு மன்றம் சென்று தீர வேண்டிய அவசியத்தைத் தான் உண்டாக்குகிறது. உடனடியாக மறுப்பு வெளியிட்டு, போக்கை மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

"பொதுமக்கள், வதந்திகளையும் — பொய்யுரைகளையும் வெளியிடுவதையே 'திறமை' என்று கருதி நடத்துகொள்ளும் 'தினத் தந்தி'யைப் பொருட்படுத்துவதில்லை என்றபோதிலும், ஒரு பெரிய கழகத்தைக் கேலி செய்யும் முறையில், அண்ணா பேசியதாக வெளியிட்ட செய்கையைக் கண்டு, கண்டிக்காமலிருக்கமாட்டார்கள்.

"பொதுமக்கள் முன்னிலையில் 'ஒலிப்பதிவு' செய்யப்பட்டுள்ள அண்ணா பேச்சை வெளியிட கழகம் தயாராக இருக்கிறது; 'தினத் தந்தி'யின் செய்தி எவ்வளவு அபத்தம் என்பது, அதன்மூலம் வெட்டவெளிச்சமாகும்.

"'தினத் தந்தி' அதிபர், என்ன நிபந்தனை விதிக்கிறார்—பரிகாரம் என்ன தேட முன்வருகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்."

அன்புள்ள,

கே. ஏ. மதியழகன்,

முன்னாள் துணைச்செயலாளர்

சேலம் மத்திய சிறையில் மதுக்குடி!

போதையிலிருந்த வார்டர்— போலீஸ் படை கைகலப்பு

இரண்டு போலீஸ்காரர்களுக்குக் காயம்

சில வார்டர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

சேலம், மே 25—

சேலம் மத்திய சிறையில் வேலை பார்த்துவரும் சில வார்டர்கள் குடி போதையில் இருப்பதாகப் போலீசுக்குத் தகவல் கிடைத்தது. நகர போலீஸ் பிரிவினர் மத்திய சிறைக்குச் சென்று, வார்டர் இராஜகோபால் என்பவரைக் கைது செய்ததாகத் தெரிகிறது.

மேற்படியாரைக் கைது செய்ய முயன்றபோது, வேறு குடி போதையிலிருந்த சில வார்டர்களும், அவருக்குத் துணையாக வந்து, போலீஸ் படையினரைத் தாக்கினதாகவும், அதன் விளைவாக ஒரு எட்-கான்ஸ்டேபிளும், ஒரு கான்ஸ்டேபிளும் காயமடைந்தனர் எனவும் தெரியவருகிறது.

இவ்வகையில் வார்டர் இராஜகோபால் உள்ளிட்ட சில வார்டர்கள் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது இ. பி. கோ. 147, 332, 225 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள ஆறு வார்டர்களும் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

கடமையை நினைவூட்டுகிறார் நிதி அமைச்சர்!

"கிராமங்களில் வாழும் மக்களுக்கு சுத்தமான குடி தண்ணீர், சுகாதார, ஆரோக்கிய, மருத்துவ வசதிகள் ஆகியவை போன்ற முக்கியமான வசதிகளைச் செய்து கொடுப்பது ஒவ்வொரு மாநில சர்க்கார்களின் கடமையாகும்,"

என்று, இந்திய நிதியமைச்சர் தேஷ்முக், கிராமவாசிகளின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ரூ. 25,000 மூலதனத்துடன் 25 கிராமாந்திர பாங்கிகள்

சென்னை மாநிலத்தில் ஜூன் திங்கள் இறுதியிலிருந்து 25 கிராமாந்திர பாங்கிகள் ஆரம்பமாகுமென கூட்டுறவு இலாகா மந்திரி ஏ. பி. ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

ஒவ்வொரு கிராமாந்திர பாங்கிக்கும் பங்கு முதலீடு ரூ. 25,000 இருக்கும் என்றும், இந்தப் பங்குப் பணம் முழுவதும் அனேகமாக வசூலாகிவிட்டதென்றும் கூறப்படுகிறது.

இதுவரை 19 கிராம பாங்கிகள் துவங்க அனுமதி தரப்பட்டுவிட்டது என்றும், அவற்றில் 4 பாங்கிகள் வேலை துவங்கிவிட்டன என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பழி வாங்கவா?

லண்டன், மே. 25—

சர்க்காரை வீழ்த்த முயன்றதாக ஒரு டச்சு கடற்படை அதிகாரி மற்றும் 33 பேர் மீது, இந்தோனேஷிய சர்க்கார் வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த வழக்கு 15 மாதங்களாக நடந்து வருகிறதாம்.

தியமின் ஆட்சிக்கு தீராத 'தலைவலி!'

'விடுதலை இராணுவம்' அமைந்துள்ளதாம்

சைகோன், மே 25—

தென் வியட்நாமில் மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

நாடு முழுவதிலும் தேசிய இராணுவத்தினருக்கும் ஹோ-ஹா-ஹாவோ துருப்புகளுக்கும் போர் மூண்டிருப்பதாக அதிகாரபூர்வமாகத் தெரியவருகிறது.

ஹோவா-ஹாவோ பிரிவினர் கொரில்லாப் போரில் இறங்கியதாகவும், அவர்களுடன் இன்னும் நேருக்கு நேர் யுத்தம் துவங்கவில்லை என்றும்: ஒரு இராணுவ அதிகாரி கூறியிருக்கிறார்.

வியட்நாம் இராணுவ அலுவலக முன்னாள் பிரதம அதிகாரி ஜெனரல் வான்ஹின், தென்வியட்நாமை தியமின் ஆட்சியிலிருந்து விடுவிப்பதற்காக ஒரு 'விடுதலை இராணுவத்தை' அமைத்திருப்பதாக வதந்திகள் உலவுகின்றன.

டாக்டர் ஹோசிமின் ஆட்சிக்கு ஆதரவு தேட தென்வியட்நாமில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வட வியட்நாம் முயற்சிப்பதாயும், அதற்காக ஏஜெண்டுகளை, தென் வியட்நாமிற்குள் அனுப்பி வருவதாயும், தென் வியட்நாம் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

சென்னைக்கு நியாயமான பங்கு கிடைக்குமாம்!

இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் பற்றி காமராசர்

"நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டமும், கனரக மின்சார உற்பத்தி ஆலையும் சென்னை மாநிலத்தில் நிறுவப்படுமானால் நமது பிரச்சினைகளில் பெரும்பாலானவை—முக்கியமாக வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை தீர்ந்துவிடக்கூடும்."

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்குவதில் மத்திய சர்க்கார் சென்னைக்கு நியாயமான பங்கு தருவார்கள் என நம்புகிறேன்,"

—என்று, முதன் மந்திரி காமராசர், மத்திய நிதியமைச்சர் தேஷ்முக் தனது இல்லத்திற்கு வந்து இரண்டு மணி நேரம் உரையாடிய பின்பு கருத்தறிவித்திருக்கிறார்.

அகாலியர் மீது கண்ணீர்ப் புகை - தடியடி பிரயோகம்

பதின்மூன்று சீக்கியப் பெண்கள் கைது

லூதியானாவில் இன்று போலீஸ் தடை உத்தரவை மீறிய அகாலிதளத்தினர்மீது, போலீஸ், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி, தடியடிப் பிரயோகமும் செய்திருக்கிறது.

கூட்டத்திலிருந்து போலீசார்மீது செருப்பு, கல், மண் முதலியன வீசி எறியப்பட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அமிர்தசரசில் தடை உத்திரவை மீறினதற்காக மொத்தத்தில் பதின்மூன்று சீக்கியப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அகாலியர்—போலீஸ் மோதுதலின் காரணமாக ஒரு பெரிய போலீஸ் அதிகாரியும், இரண்டு சப் - இன்ஸ்பெக்டர்களும், ஆறு போலீஸ்காரர்களும் காயமுற்றனர் எனக் கூறப்பட்டிருக்கிறது. கூட்டத்திலிருந்த இருவர் காயமுற்றனர் எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

கடந்த 16-ந் தேதி முதல் துவக்கப்பட்ட இக்கிளர்ச்சியில் இதுவரை 700 அகாலியர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—5—'55 வியாழன்

வெல்லம் தித்திக்குமாமே!

"வெல்லம் தித்திக்கும்; நன்ருக இருக்கும்—கொஞ்சம் தின்னம்மா, தின்னு!"

"வாழைப்பழம் இனிக்கும்; தின்னத் தின்ன மேலும் தா தா எனக் கேட்கச் சொல்லும்—இதை மட்டுமாவது தின்றுப் பார்!"

"பால் உடலை வளர்க்கும்; உருசியாக இருக்கும்—கொஞ்சம் குடித்துப் பார்!"

இப்படி, எதையும் தின்ன மறுத்து, பிடிவாதம் பிடித்து, அழுதுகொண்டு இருக்கும் சிறு குழந்தைகளை, அதனதன் பெற்ருேர்கள், வெல்லத்தையும், வாழைப்பழத்தையும், பசும்பாலையும் காட்டி, கெஞ்சிக் கொஞ்சிக் கேட்பது இயல்பு—எதிர்பார்க்கக்கூடியது.

நம்மை எல்லாம் சிறு குழந்தைகளாகக் கருதி, நாடாள வந்த காங்கிரஸ் நல்லவர்கள், 'பால் பருகுங்கள்—பழம் தின்னுங்கள்—வெல்லம் சாப்பிடுங்கள்,' என உருக்கமாகக் கேட்கக் கிளம்பி இருக்கின்றனர்.

கேட்கவா செய்கின்ருர்கள்—வருந்தி வருந்தி வேண்டிக் கொள்ளுகின்றனர்!

'பால் பருகுங்கள்—பழம் தின்னுங்கள்—வெல்லம் உண்ணுங்கள்,' எனக் காங்கிரஸ் அமைச்சர்கள் நம்மை வேண்டிக்கொள்ளும்பொழுது, நமக்கு இனி என்ன குறை—நமது வாழ்க்கைச் சுமை இன்ருேடு தொலைந்தது—நாம் இனி இன்பத்திலே திளைப்போம்—இனிய கீதம் எழுப்புவோம்—துள்ளி ஆடிப் பூரிப்போம்—எனச் சாதாரண மக்கள், தங்களையும் அறியாமல் எண்ணவே செய்வர்!

"மோட்சத்திலே அழகிய அரம்பையர் உண்டு—அவர்களுடன் நீங்கள் விரும்பியவாறு இன்பம் பெற்று மகிழலாம்; அங்கே கற்பக விருட்சம், காமதேனு ஆகிய இரண்டும் இருக்கின்றன—நீங்கள் கோரியதைக் கொடுக்கும்—என்றென்றும் நீங்கள் சுக போகத்தில் புரளலாம்!"

இப்படிக் கூறிவந்த புராணக் கதைகளை நமது முன்னேர்கள் நம்பாமலா இருந்தார்கள்? இன்றுள்ளவர்களும் நம்பித்தானே, அக்கதைகளைக் கட்டிவிட்ட எத்தர் சந்ததியினருக்கு, தானந் தருகின்றனர், பற்பல உபசாரங்களும் செய்துவருகின்றனர்!

மோட்சம் எங்கே இருக்கிறது? அங்கு இட்டுச் செல்லும் பாதை எது? வாகன வசதியாவை?---கேட்டிருக்க வேண்டும்—கேட்டதுண்டா இதுவரை, இக்கேள்விகளை, நம்மைத் தவிர!

அறிவுக்கு எட்டாத—ஆனுல் ஆசையைத் தூண்டக்கூடிய—மோட்ச லோக இன்ப சாதனங்களை புராண எத்தர்கள் கூறினகாலே, பித்தர்கள் கேட்டுக்கொண்டதோடு நில்லாமல், அவைகளை உண்மை என நம்பிடவும் செய்தனர்—அவைகளை அடைவதற்கென அவ்வெத்தர்கள் காட்டிய நடைமுறைகளின்படி, மக்கள் ஒழுகிடவும் செய்தனர்!

கற்பனை இன்பத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே, அறிவைத் துறந்துவிட்டு, ஆசைக்குத் தங்களை அடிமையாக்கிக் கொண்டவர்கள்தான் நம்மவர்கள் என்ற உண்மையை, மற்றவர்களைப் போன்றே, நமது காங்கிரஸ் அமைச்சர்களும் அறிந்துகொண்டு இருக்கிருர்கள். அப்படி அறிந்துகொண்டு இருப்பதின் விளைவாகத்தான், 'வெல்லம் தித்திக்கும்; வேண்டிய மட்டும் உபயோகியுங்கள்' என மக்களுக்கு உபதேசம் செய்யக் கிளம்பி இருக்கிருர்கள், அமைச்சர்கள்!

வெல்லம் தித்திக்கும் என்கிருர்கள்!

மணல் சக்கரையைவிட வெல்லம் உடலுக்கு ஊரூட்டக்கூடியது என்கிருர்கள்!

ஒப்புகிருர்கள் — மக்களில் மறுப்பவரில்லை!

'பால்—உடலை போஷிக்கும்' எனும், பிறர் அறியாப் புதுமையைப் போதிக்கிருர்கள் அமைச்சர்கள்!

'பால் — அதிகப்படியாகப் பருகவேண்டும்' எனப் பரிவுடன் மக்களுக்கு போதனை புரிகிருர்கள்!

பாலிலுள்ள உடல் வளர்க்கும் சத்தைத் தாங்கள் அறிந்திருந்தாலும் இல்லாமற்போனலும், பால் அருந்தப் பெரும்பாலோர் ஆசைப்படுகிருர்கள்; சிலர் அருந்தவும் செய்கிருர்கள்.

'பால்—பழம்—வெல்லம் — இம்மூன்றையும் அருந்துங்கள்—தின்னுங்கள்' என்பதற்கு, நாளும் விழாவும், பெரும்பணச் செலவில் பிரசாரமும், அதைச் செய்ய அமைச்சர்களும் தேவைதானு என்பதுதான் சிந்திக்க வேண்டிய விஷயம்—நாம் மட்டுமல்ல—அமைச்சர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும்கூட!

குளி; கந்தையைக் கசக்கிக் கட்டு; குப்பையைத் தொலைவில் கொட்டு—இவைகளுக்குப் பிரசாரம், திறமையான வகையில் தேவை இருக்கிறது!

பால் அருந்து—பிரசாரத்திற்குத் தேவையே இல்லாத விஷயம்.

பழம் சாப்பிடு—சாதாரணமாகப் பிறர் கூற வேண்டிய அவசியமில்லாமலே, ஒவ்வொருவரும் செய்துவரும் செயல்.

வெல்லம் தின்னுவதும் மேற்கூறிய வகையைச் சேர்ந்ததே!

பிரசாரம் தேவைப்படுகிறது—அதுவும் பலமாக—ஆனுல் எதற்கு?

பால் பருகுங்கள்—வெல்லம் தின்னுங்கள் — என்பதற்காக அல்லவே அல்ல!

பாலைப் பெறும் மார்க்கம் கூறிட—வகை செய்திட—பிரச்சாரம் தேவைப்படுகிறது! பிரச்சாரத்துடன் சிறந்த செயலும்—ஏற்பாடும் கட்டாயமாகத் தேவைப்படுகிறது.

பால் அருந்த விரும்புவோர் ஏராளம்—ஆனுல், பால் கிடைக்க இருக்கும் வசதியோ சிலருக்குத்தான்.

பாலின் பெரும் பயனைக் கூறிடும் அமைச்சர்கள், பால் கிடைக்காது பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் உடல் இளைத்து அகால மரணமடைவது கண்டும், பாலை பக்தியின் பெயரால் பாழ்படுத்தும் மக்களின் மதி விளங்க, தீவிரமான பிரசாரம் செய்ய வேண்டும்!

அப்படிச் செய்கிறவர்களைத்தான் அமைச்சர்கள், 'நாத்திகர்கள்' என்கிருர்களே; அந்த நாத்திகக் காரியத்தை அவர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்க முடியுமா?

பாலின் உயர்வை, பழத்தின் சிறப்பை, வெல்லத்தின் பெருமையைக் கூறுகிறவர்கள், அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குடிமகனும் தேவையான அளவு பெற்றுஅனுபவிப்பதற்குரிய வழிவகைகளைக் கூற வேண்டும் - வசதிகளைச் செய்து தர வேண்டும்.

வெல்லத்தின் சத்தோ, பாலின் உயர்வோ தெரியாத காரணத்தால் அல்ல, மக்கள் அவைகளைதீண்டாமல்—தொடாமல் - பார்க்காமல் - நினைக்காமல் இருப்பது! அவைகளைப் பெற வசதி - வகை கிடைக்கப் பெருத காரணத்தால்தான், மக்கள் அவைகளை அலட்சியப் படுத்துவதுபோல் நடந்து கொள்ளுகிருர்கள்.

இந்த உண்மை அமைச்சர்களுக்கும் தெரியும், நாம் அறிந்திருப்பதைவிட அதிகமாக! இருந்தாலும் பேசுகிருர்கள், அது ஒன்றைமட்டுமே செய்யத்தான் தங்களுக்கு அதிகாரமும் ஆற்றலும் இருக்கிறது என்ற போக்கில்!

அவர்கள் பேச்சு கண்டு 'வெல்லம் தித்திக்குமாமே!' எனச் சாதாரண மக்கள் ஏளனமாகப் பேசுவதை - இல்லை - ஏசுவதை, அமைச்சர்கள் அறிந்துகொள்ள வேண்டும்; அறிந்துகொண்டு அவ்வேசலைத் துடைத்துக்கொள்ள முயல வேண்டும் - முன் வரவேண்டும்.

'அபாய அறிவிப்பு' சாதனம்!

அணுசக்தி விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்

தானகவே இயங்குகின்ற நெருப்பு அபாய அறிவிப்புச்சாதனமொன்றை, லண்டனிலுள்ள அணுவிஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம்.

இந்தத் தானே இயங்கும் சாதனத்திற்கு, எரியும் நெருப்பிற்கும், எரியாத நெருப்பிற்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளும் ஆற்றல் இருக்கிறதாம்!

எரியாத நெருப்பு — உதாரணமாக ஒரு சிகரெட்டிலிருந்து புகை வந்தால் இந்தச் சாதனம் அறிவிப்பொன்றும் செய்யாது; ஆனுல், எரிகிற நெருப்பு — உதாரணமாக 30 அடிக்கு அப்பால் ஒரு தீக்குச்சி எரிந்தால்கூட அதைத் தெரிந்துகொண்டு இந்தச் சாதனம் ஓசையிட்டு அலறுமாம்!

'ஆவடி' அல்ல 'திருச்சி'

மாநாட்டில் கூடுவது கோபுர அழகை கண்டு 'கோவிந்தா' போட அல்ல!

மாநாடு வெற்றிபெற பொருள் தாரீர்

சென்னை சிறப்புக் கூட்டத்தில் அண்ணு தந்த விளக்கமும் வேண்டுகோளும்

"இன்று நடைபெறும் இந்தச் சிறப்புக் கூட்டம் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ 1 நன்கொடை செலுத்தியவர்களை மண்டபத்தினுள் அனுமதித்து நடைபெறுகிறது; ரூபாய் ஒன்று அதிகம் என்பதை உணர்கிறேன்; ஆனுல், நாம், திருச்சியில் நடைபெறவேண்டிய மாநில மாநாட்டிற்காக நிதி திரட்ட வேண்டியவர்களாயிருக்கிறேம்; இன்னும், ரூ 23,000 நமக்கு வந்தாக வேண்டும். அப்போதுதான் நாம் மாநாட்டினைச் சிறப்புற நடத்த முடியும்;

"திருச்சியில் மாநில மாநாட்டிற்கு சுமார் 3 லட்சம் மக்கள் வருவர் என்று நான் எதிர்பார்க்கிறேன்; வருகிற அத்தனை பேர்களுக்கும் ஓரளவேனும் வசதி செய்து தந்தாக வேண்டும்;

"ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டைப்போல், கோபுரத்தின் அழகைப் பார்த்துவிட்டு, 'கோவிந்தா, போட்டுவிட்டுப் போவதற்காக, மக்கள் நமது மாநாட்டிற்கு வரமாட்டார்கள்;

"தலைவர்களுக்கு மிகப் பெரிய மேடை — பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்புப் பந்தல்—என்று அமைத்துவிட்டு, 'மாநாட்டிற்கு வந்த இலட்சக்கணக்கான மக்களும் வெட்டவெளியில்தான் நிற்க வேண்டும்,' என்று ஏற்பாடு செய்து, 'இதுதான் சோஷலிசம்,' என்று சொல்லி அனுப்பி விடுவதல்ல—நமது மாநில மாநாடு;

"காலை 8 மணிக்குத் துவங்கி இரவு 2-அல்லது 3-மணி வரையில் தொடர்ந்து நிகழ்ச்சிகள்; சொற்பொழிவுகள்; இடையிடையே இசை நிகழ்ச்சிகள்; இரவு, கழகக் கருத்தமைந்த நாடகங்கள்—என்ற நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, மாநாட்டிற்கு வருவோரில் வசதி படைத்த சிலரைத் தவிர, இதரர் எல்லோரும், மாநாட்டுப் பந்தலிலேயே தங்கவேண்டியவர்களாயிருப்பார்கள்; அவர்களுக்கெல்லாம் வசதி செய்து தந்தாக வேண்டும்; இத்தனை பெரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகத்தான் மாநாட்டிற்கென முதலில் நிதி திரட்டுகிறேம்; அதை எண்ணி, கழகத் தோழர்களும், இதர மக்களும் இம்மாதிரி நடைபெறும் சிறப்புக் கூட்டங்களுக்கும், இதர நிகழ்ச்சிகளுக்கும், இன்று போல் பெருவாரியாகக் கலந்துகொண்டு, நிதி வசூலை சீக்கிரமாக முடிக்க உதவ வேண்டும் என்று பெரிதும் வேண்டிக்கொள்கிறேன். நமது கழகக் கருத்துக்கள் நாட்டு மக்களிடையே வேரூன்றி வளர்ச்சி பெற்றிருந்தாலும், அந்தக் கருத்துக்களை மேலும் மக்களிடையே பரப்புவதற்கு—ஆழப் பதியச் செய்வதற்கு—நம்மிடம் வசதிகள் மிகக் குறைவு; எனவேதான், தோழர்கள், மாநில மாநாட்டிற்காக நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு நிதி வசூலிக்க வேண்டியுள்ளது."

மருத்துவ உதவியின்றி பிரசவம்!

அமெரிக்கப் பெண்மணி எட்டு குழந்தைகள் பெற்றுள்ளார்

அமெரிக்க நகரம் ஒன்றில் 40 வயதுடைய பெண்மணி ஒருவர், சிரமம் எதுமின்றி, எவருடையவும்—குறிப்பாக மருத்துவருடையவும் உதவியின்றி கடந்த மே 19-ந் தேதியன்று, ஒருமணி நேரம் மட்டுமே வீட்டு வேலை எதும் செய்யாது ஓய்வு பெற்றுக்கொண்டு தனது எட்டாவது குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிருர்.

இயற்கையான சிரமம் எதுவுமில்லாத பிரசவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை அவருக்கு உண்டு என்றும, இதுவரை எட்டு பிரசவங்களின் போதும் அவர் எந்த மருத்துவரின் உதவியையும் நாடியதில்லை என்றும் கூறப்படுகிறது.

முற்றுப் புள்ளி?

இதுவரையிலும், கப சுரத்திற்காக மருத்துவர்கள் செய்துவந்த மருந்துகளெல்லாம், அந்தச் சுரத்திற்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய அளவிற்கு தேகத்தில் பலவிருத்தி செய்வதுதானே ஒழிய, கப சுரத்தை அறவே ஒழிப்பதற்கான மருந்துகள் எதுவுமே கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனுல் இப்போது, நியூயார்க்கிலுள்ள ராக்பெல்லர் மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர், கப சுரத்தை உண்டாக்கும் கிருமிகள் பெருகுவதைத் தடுக்க 'டீ' எனும் பெயருடைய இரசாயன மருந்தொன்றைக் கண்டுபிடித்திருக்கிருராம்.

இம்மருந்தை உபயோகித்து, உலகம் முழுமையிலும் கபசுரத்தை அடியோடொழித்துவிடலாம் என்று கூறப்படுகிறது.

சிறப்பு மிக்க செயற்கை வைரங்கள்

இயற்கை, பல்லாண்டுகளாகத் தன்னகத்தில் வைத்து விளைவிக்கும் உண்மையான வைரத்தை, விஞ்ஞானிகள் இப்போது ஆராய்ச்சிக்கூடங்களில் சில நிமிடங்களில் தயாரிக்கின்றனர். நியூயார்க்கில் உள்ள ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனியின் விஞ்ஞானிகள் இத்துறையில் வெற்றியடைந்திருக்கின்றனர். உலக வரலாறு முதன் முதலாக இப்பொழுதுதான் செயற்கை வைரம் கண்டிருக்கிறது.

இச் செயற்கை வைரங்களுக்கும் இயற்கை வைரங்களுக்கும் வித்தியாசமே இல்லை; எக்ஸ்-ரே பரிசோதனை, ரசாயன ஆராய்ச்சி, திண்மை ஆராய்ச்சி ஆகியவையால் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்கை வைரத்தால் மற்ற வைரங்களை அறுக்கலாம்; இவ்வாறு வைரங்களை அறுப்பதற்கு மனிதன் இதற்கு முன் வேறெருபொருளும் கண்டுபிடித்ததில்லை.

ஆயினும், இன்று செய்திருக்கும் செயற்கை வைரங்கள், இயற்கை வைரக் கற்களைப்போல அழகு செய்யும் மணிகளாக விளங்கவில்லை அவை சிறியவை; அறுப்பது, வர்ணம் தீட்டுவது முதலிய அவசியமான தொழில்களுக்கு வேண்டிய கருவிகள் தயாரிப்பதற்குப் பயன்படும் சாதாரண வைரங்களைப் போன்றவை.

சுத்தக்கரி உள்ள ஒரு பொருளை மிகச் சிறிய ஒரு அறையினுள் வைத்து, அந்த அறையின் உஷ்ணத்தையும், 'அழுத்த'த்தையும் மிக மிக அதிகமாக்கிச் செயற்கை வைரம் தயாரிக்கிருர்கள்.

முதன் முதலில் தயாரித்த வைரத்தை உருவாக்க 16 மணி நேரம் ஆயிற்று. இதற்குரிய ஆராய்ச்சிக்கு அக்கம்பெனிக்கு லட்சக் கணக்கான டாலர் செலவாயிற்று ஆயினும், இதற்குப் பின் ஒவ்வொரு வைரமும் தயாரிக்க இரண்டு அல்லது மூன்று நிமிடமே தேவைப்பட்டது.

'தமிழ் மொழியை வளர்க்கவா? சீர்கேடுறச் செய்யவா?'

'தமிழ் இன்னும் கிழமாகிவிடவில்லை'

அழகேசனின் ஆலோசனைக்கு 'தமிழ் நாடு' இதழ் தரும் சூடு!

“ 'தமிழில் புதுச் சொல் செய்தல்,' என்ற தலைப்பில் திரு' ஓ. வி. அளகேசன், டில்லியில் வெளியாகும் ஒரு தமிழ்ச் சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரை, தமிழ் மக்களிடையே விழிப்போடு, வருத்தத்தையும் தோற்றுவிக்கத்தக்கதாய் அமைந்துள்ளது. 'தமிழ் மொழி கிழமாகவும், நொண்டியாகவும் போகாமல், ஓட்டம், துள்ளல் போட்டு நடக்க வேண்டும்' என்ற எண்ணத்துடனும், 'குள்ளனுயிருந்த திருமால் ஓங்கி வளர்ந்ததுபோல, தமிழும் விசுவ வியாபகம் அடைய வேண்டும்' என்ற நோக்கத்துடனும், திரு. அளகேசன் சில ஆலோசனைகளைக் கூற முன்வந்திருக்கிறர் என்று அவருடைய கட்டுரையிலிருந்து தெரிகிறது. 'என்றுமுள தென்தமிழ் கிழமாகவும், நொண்டியாகவும் போகும்படியான நிலைமையிலிருக்கிறது,' என்று முதன் முதலாக அவருடைய கட்டுரையிலிருந்துதான் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்;

“திரு. அளகேசன் இந்தியப் பேரரசின் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளவர் என்ற காரணத்தால், அவருடைய ஆலோசனைகள் சற்று சிறப்பான மதிப்புப் பெறக்கூடும் என்று அஞ்சியே, நாம், இதுபோன்ற புதுச் சொல் உருவாக்குதலின் பொருந்தாத்தன்மையை விவரித்துக் கூறியிருக்கிறேம்;

“அப்புதுமைச் சீர்திருத்தம் செய்ய முற்படுவோர், மொழியை வளர்ப்பதற்கான முறைகளைக் கூற வேண்டுமேயொழிய, மொழியைச் சீர்கேடுறும்படியான இத்தகைய ஆலோசனைகளைக் கூறக்கூடாது. 'அறிஞர்களும், புலவர்களும், பொதுமக்களும் இம்மொழி வளர்ச்சித் திருப்பணியில் ஈடுபட வேண்டும்,' என்று திரு. அளகேசன் விரும்புகிறர். இம் மொழி அழிப்புப் பிணி தம்மைத் தாக்காமல் பாதுகாத்துக்கொள்ளுவது தமிழ் மக்களுடைய கடமையாகும்.”

“காலத்தோடு கற்பனை கடந்த கருவூலத்துப் பழம் பாடற் கலைச் செல்வமும், பண்டைக் கால மொழிகளாகிய இலத்தீன், ஆரியம் முதலியவை போன்று பேச்சு வழக்கிழந்த நிலைக்குச் செல்லாமல், இன்றும் மங்காத இலக்கியப் புகழோடு, மக்கட் சமுதாய நடைமுறைக்குகந்த சொற் செல்வமும் ஒருங்கே பெற்றுள்ள தமிழை, 'குள்ளனு'க்கு ஒப்பிட்டதன் அடிப்படை நமக்குப் புலப்படவில்லை கிழமைத்தனத்தையும், குள்ளத்தனத்தையும் தமிழுக்கு அடைமொழிகளாகக் கூறுவது பொருந்தாதென்பதை, 'மனேன் மணீயத்'தை ஆக்கிய பேராசிரியர் பி. சுந்தரம் பிள்ளை நன்கு விளக்கியுள்ளார். தமிழின் இளமைத் தனத்தைக் கண்டு — கிழமைத் தனத்தைக் கண்டல்ல — அவர் தன்னுடைய வியப்பைத் தெரிவித்திருக்கிறூர். 'கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும் — உன்னுதரத் துதித் தெழுந்தே ஒன்று பல ஆயிடினும் —ஆரியம்போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாவுன்—சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே' — என்று அவர் தமிழ்த் தெய்வத்தை வணங்கிப் பாடியிருக்கிறூர். மற்றொரு பாட்டில், 'அனைத்துலகு மின்பமுற எத்திசையும் புகழ மணக்க இருந்த பெருந் தமிழணங்கே'—என்று, தமிழ் மொழியின் அனைத்துலகப் புகழைப் போற்றியிருக்கிறூர்.

“இதற்கு ஒரு சிறு எடுத்துக் காட்டாக, ஒரு ஜெர்மன் அறிஞர், தமிழ் மறையாகிய திருக்குறளைப் பற்றிக் கூறியதைச் சுட்டிக்காட்டலாம்: 'வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்— உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி' என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளையால் குறிப்பிடப்பட்ட திருக்குறளைப் பற்றி, டாக்டர் ஆல்பர்ட் சுவீட்சர் என்ற உலகப் புகழ்ப்பெற்ற தற்காலப் பேரறிஞர் கூறியிருப்பதைத் தமிழ் மக்கள் மனத்தகத்தில் கொள்ள வேண்டும்; 'இந்தியக் கருத்தும், அதன் வளர்ச்சியும்,' என்ற நூலில், 'பகவத் கீதையைக் காட்டிலும் சிறப்பான நூல் திருக்குறள்தான்,' என்று, அவர் பல ஆதாரங்களுடன் வற்புறுத்தியிருக்கிறூர். இத்தகைய புகழும், சிறப்பும் வாய்ந்த தமிழ் மொழிக்குக் கிழமைத்தனத்தையும், குள்ளத்தன்மையையும் கற்பித்ததைக் கண்டு தமிழ் மக்கள் வியப்புறுவார்கள்.

“இந்தக்கிழமைத்தனத்திலிருந்து இளமை பெறுவதற்கும், குள்ளத் தன்மையிலிருந்து ஓங்கி வளர்ந்து மாபெரும் உருவத் தோற்றம் பெறுவதற்கும், திரு. அளகேசன் கூறியுள்ள ஆலோசனையைக் கண்டு தமிழ் மக்கள் மேலும் வியப்புறுவார்கள்.

“ 'கோபம்' என்ற சொல்லிலிருந்து, 'கோபித்தல்' என்ற சொல் வழங்கப்படுவது போல, 'வேகம்' என்ற சொல்லிலிருந்து. 'வேகித்தல்' என்ற புதுச் சொல்லை ஏன் உண்டாக்கக் கூடாது?” என்று அவர் வினவுகிறூர்.

“அவருடைய மொழிச் சீர்திருத்த 'வேகத்'தைக் கண்டு, சிலர், 'கோபித்தல்' என்ற உணர்ச்சி வயப்பட்டவர்களாகவுங்கூடும் என்று நினைக்கிறேம். ஒரு சொல் சீர்திருத்தத்தோடு அவர் நிற்கவில்லை; பல சொற்களை அவர் புதுப்பிக்கப் பார்க்கிறூர்.

“ 'வாதம்' என்று சொல்லிலிருந்து 'வாதித்தான்' என்ற சொல் தோன்றியிருப்பது போல, கீதம்' என்ற சொல்லிலிருந்து 'கீதித்தான்' என்ற புதுச் சொல்லை உண்டாக்கினுல் அதில் என்ன பிழை?” என்று அவர் கேட்கிறூர். கேட்பதோடு நின்றுவிடாமல், பாரதியாருடைய பாடலையும் பிழை திருத்தும் அளவுக்கு அவர் வந்திருக்கிறூர். 'கீதம் பாடும் குயிலின் குரலை,' என்று பாரதியார் பாடுகிறூர்.”

“ 'கீதிக்கும் குயிலின் குரல் என்று அவர் பாடியிருக்கலாம்—' இலக்கணம் குறுக்கே நின்றிராவிட்டால்” என்று திரு. அளகேசன் கூறுகிறூர்.

“இலக்கணம், மொழி வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கின்றது போலும்! இலக்கியங் கண்டதற்குத்தான் இலக்கணம் வகுத்திருக்கிறூர்கள் -இலக்கிய வளர்ச்சிக்கோ, மொழி வளர்ச்சிக்கோ தடையாக இருப்பதற்கல்ல. பாரதியார் பாடலைத் திருத்தியதுபோல், சங்க நூல்களையும், அதற்கு முற்பட்ட நூல்களையும் இப்புதிய முறையில் சீர்திருத்தினுல், தமிழ் இலக்கியம் என்னவாகும்?

“திரு. அளகேசன் கையாண்டுள்ள வேறு சில புதுச் சொற்கள் வியப்பைத் தரத்தக்கனவல்ல — வருத்த உணர்ச்சியை உண்டாக்கத் தக்கன என்று கூறலாம்.

“ 'உதை-உதைத்தான்'—'விதை——விதைத்தான்' என்பது போல, 'கதை-கதைத்தான்' என்று ஏன் கூறக்கூடாது? 'ஊரில் மழை பெய்ததா?' என்பதற்குப் பதிலாக, 'ஊரில் மழைத்ததா?' என்று கேட்கலாம் அல்லவா?

'வம்பு பேசினன்' என்று சொல்வதற்கு பதிலாக 'வம்பினன்' என்று ஏன் சொல்லக் கூடாது? 'தேரையைப் போல் ஆய்விட்டான்' என்ற சொற்றொடரை, 'அவன் உடல் தேரைத்தது' என்று கூறுவதில் பிழை யாது?”—இவ் வினுக்களைத் திரு. அளகேசன் எழுப்பியுள்ளார்.

“இதுமட்டுமல்லாமல், 'காட்சித்தார்கள்,' 'மீட்சித்தார்கள்' 'ஆட்சித்தார்கள்' என்ற சொற்களை, முறையே, 'காட்டினூர்கள்,' 'மீட்டார்கள்,' 'ஆண்டார்கள்,' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்று அவர் ஆலோசனை கூறுகிறூர். அவர் கூறும் காரணம் கவனிக்கத்தக்கது! “ 'காட்டினூர்கள்—மீட்டார்கள்—ஆண்டார்கள்,' என்று சொல்ல வசதியிருக்கும்போது, 'காட்சித்தார்கள் — மீட்சித்தார்கள் —ஆட்சித்தார்கள்'—என்று ஏன் சொல்ல வேண்டும் என்று கேட்கலாம்; இது சரியான கேள்வியாகவும் தோன்றும்; செல்வத்தில் ஆசை உடைய ஒருவன் அதைப் பல உருவில்—வீடென்றும், வாகனம் என்றும், நிலமென்றும், பங்கென்றும் —சேர்ப்பது போல, ஒரு மொழியும் மேம்பாடு அடைய வேண்டுமானுல், தனது சொற்செல்வத்தையும் சொற்பொருளையும் பெருக்கிக் கொண்டே போக வேண்டும்; இதுவே எனக்குத் தோன்றுகிற பதில்”—என்று அவர் காரணங்காட்டியிருக்கிறூர் — அவருடைய சீர்திருத்த மொழியில் கூற வேண்டுமானுல், 'காரணம் காட்சித்திருக்கிறூர்!”

இதுபோன்று, வியப்பையும், வருத்தத்தையும் விளைவிக்கும் வேறு சில சொற்களை உருவாக்கி விட்டு, முடிவில், “தமிழ் எழுதுவோரும், பேசுவோரும் இலக்கணப் பண்டிதர்களுக்குப் பயப்படாமல், இத்தகைய புதிய சொற்களை எடுத்தாள வேண்டும்; நாமோ, இன்று, நமது மொழியையே புதுக்க (!) வேண்டியவர்களாயிருக்கிறேம்; நமது இலட்சியம் பெரிது —அதாவது, நின்றுன் — இருந்தான்—கிடந்தானுக இருந்த தமிழ், இனி, நடந்தான்—குதித்தான்— ஓடினுன் — தாவினுன் — பாய்ந்தான் என்று ஆக வேண்டும்,” என்று அவர் கூறுகிறூர்.

“ 'பாய்ந்தான் — மூழ்கினுன்— மறைந்தான்—என்ற சொற்களும் சேர்த்தால், இச்சீர்திருத்தக்காரர்களால் தமிழனுக்கும், அவனுடைய மொழிக்கும் நேரும் முடிவு எத்தகையதென்று விளங்கும்.”

—'தமிழ் நாடு': 28-5-55.

தி.மு.க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

மறுமலர்ச்சி நூல் நிலைய பொதுக்கூட்டத்தில் பேசுவார்

27—5—55 மாலை 6 மணிக்கு, சென்னை, நேப்பியர் பார்க் மைதானத்தில், மறுமலர்ச்சி நூல் நிலைய நான்காம் ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் தோழர் அ. வாணன் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ் செழியன், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

கிராமக் கூட்டுறவு கடன் வசதி

ஆண்டிற்கு ரூ. 15 கோடி தரும் வகையில் திட்டம்

சென்னை மாநிலத்திலுள்ள கிராமக் கூட்டுறவு கடன் வசதி நிறுவனத்தை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது; இந்நிறுவனத்தின் மூலம் ஆண்டிற்கு ரூ. 15 கோடி வசதி கிடைக்கும் வகையில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மாநிலக் கிராமக் கடன் தேவையின் 20 சதவிகிதத்தை இத்தத் தொகை மூலம் சரிக்கட்ட முடியுமெனத் தெரிகிறது.

பொதுச் செயலாளருக்கு சேலம் தந்த வரவேற்பு

தி. மு. கழகத் தோழர்களின் ஆர்வம்

ஊராண்மைக் கழக வரவேற்பு — அண்ணுதுரை படத்திறப்பு விழா—எம். ஜி. ராமச்சந்திரன் பாராட்டு

★

“கடந்த பல்லாண்டுகாலமாக திராவிடத் திருநாட்டில், பகுத்தறிவுப் படையினரின் பணியால் மக்களின் உள்ளங்கள் பண்பட்டு, நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு திராவிடர்கள் தங்கள் பங்கைச் செலுத்தத் தயாராக உள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகிய உங்களுக்கு சேலம் மாவட்டப் பொது மக்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் என்றென்றும் இருக்கும்,”

என்று, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு சேலம் மாவட்ட தி. மு கழகத்தினர் 22—5—55 மாலை அளித்த வரவேற்பில் உறுதியளித்தனர்.

22—5—55 மாலை 2 மணிக்கே ஆயிக்கணக்கான மக்கள் இராசேந்திரா சத்திரத்திற்கு முன்பு கூடி விட்டனர்.

மாலை 6 மணிக்கு திறந்த காரில் பொதுச் செயலாளர் அமர்ந்திருக்க, 3,000-த்திற்கு மேற்பட்ட மக்கள், அவரை, நகரின் முக்கிய வீதிகள் வழியாக, 'வீ' மார்க்கெட் மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊர்வலத்தில், சேலம் நகர தி. மு. கழகக் கிளைகளும், மாவட்டக் கிளைக் கழகத்தினரும் கழகக் கொடிகளுடன் கலந்துகொண்டு இலட்சிய ஒலிகளை முழங்கிக் கொண்டு வந்தனர்.

ஊர்வலம் சுமார் 7-30 மணிக்கு, 'வீ' மார்க்கெட் மைதானம் வந்தடைந்தது. பொதுக்கூட்டத்தில் தாய்மார்கள் உள்பட சுமார் 50,000 பேர் கூடியிருந்தனர்.

வரவேற்புப் பொதுக் கூட்டத்திற்கு சேலம் மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர் ப. இராமலிங்கம் தலைமை தாங்கினூர்.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், நாட்டு விடுதலைக்காக தி. மு. கழகம் நடத்தும் போராட்டங்களுக்கு என்றும் தங்களது ஆதரவு இருக்குமென்று உறுதியளித்தும், தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., சேலம் நாட்டாண்மைக் கழக எதிர்க்கட்சித் தலைவர் இரா. தாண்டவன், நாட்டாண்மைக் கழக உறுப்பினர் ஆனைமுத்து, நாமக்கல் பெருமாள், ப. கண்ணன், சிற்றுளி-சுப்பிரமணியம், வி. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசினர்.

பின்னர், மாவட்ட தி. மு. கழகச் சார்பிலும், சேலம் நகர தி. மு கழகச் சார்பிலும், தென் பகுதி இரயில்வே தொழிலாளர் கழக சேலம் கிளையின் சார்பிலும் பொதுச் செயலாளர் இரா நெடுஞ் செழியனுக்கு வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

தொழிலாளர்கள் அளித்த வரவேற்பிதழில், பேரூர் பொதுக் குழுவில் நிறைவேறிய தொழிலாளர் நிலை உயரும் தீர்மானத்தை வரவேற்றும், தி. மு. கழகத்தினர் தொழிலாளர் வாழ்வு உயர வழி வகைகள் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுமிருந்தது.

பின்னர், பொதுச் செயலாளருக்கு சேலம் நகர கிளைக் கழகங்கள், மாவட்ட தி. மு. கழக கிளைகள், தொழிலாளர் மன்றங்கள், படிப்பகங்கள், தனிப்பட்ட நபர்கள் ஆகியோர் சார்பில் ஏராளமான கைத்தறி ஆடைகள், மலர்மாலைகள், நூல்மாலைகள் அணிவிக்கப் பட்டன.

பின்னர் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் சேலம் மாவட்ட மக்கள் தனக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினூர்.

பொதுச் செயலாளர் சொற்பொழிவுக்குப் பின்னர் தோழர் எம் பி. சுப்பிரமணியம் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவடைந்தது. கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் அண்ணாமலை, நித்தியானந்தம் ஆகியோர் இயக்கப் பாடல்களைப் பாடினர்.

★

விருந்தளிப்பு

இரவு 10 மணிக்கு பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனுக்கு சேலம் மாவட்ட நண்பர்கள் சார்பில் சேலம் 'சுந்தர் கபேயில்' விருந்து ஒன்று அளிக்கப்பட்டது. விருந்தில் பல பிரமுகர்கள் உட்பட 50 பேர் கலந்து கொண்டனர்.

★

ஓமலூர் ஊராண்மைக் கழக வரவேற்பு

22—5—55 ஞாயிறு மாலை 5 மணிக்கு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஓமலூர் ஊராண்மைக் கழகத்தினர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியனுக்கு வரவேற்பளித்தனர்.

மாலை 4 மணிக்கு ஓமலூர் சென்ற பொதுச் செயலாளரை ஏராளமான பொதுமக்கள் கூடி நின்று வரவேற்றனர். அவரை, ஓமலூர் பிரயாணிகள் விடுதியிலிருந்து ஊராண்மைக் கழகத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊராண்மைக் கழக கட்டிட வாயிலில் பொதுச் செயலாளரை ஊராண்மைக் கழகத் தலைவர் ஆர். குப்புசாமி அவர்கள் வரவேற்ருர். பின்னர் ஊராண்மைக் கழகக் கட்டிடத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. தேநீர் விருந்தில் பாராளுமன்ற உறுப்பினர் பேபி கந்தசாமி, ப. கண்ணன், ப. இராமலிங்கம், மாவட்ட உதவி பஞ்சாயத்து அதிகாரி, ஓமலூர் ஊராண்மைக் கழக நிர்வாக அதிகாரி, மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஊராண்மைக் கழக கட்டிடத்துக்கு எதிரில் மேடை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

★

அண்ணுதுரை உருவப் படத் திறப்பு

தி. மு. கழக முன்னுள் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களின் உருவப் படம் ஊராண்மைக் கழகத்தில் திறந்து வைக்கப் பட்டது.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்குமாறு பொதுச்செயலாளரை, தோழர் பேபி கந்தசாமி கேட்டுக் கொண்டார்.

பொதுசெயலாளர் நெடுஞ் செழியன் தனக்கு ஊராண்மைக் கழகத்தினர் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினூர்.

பின்னர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அண்ணுதுரை அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து, அண்ணு அவர்கள் நாட்டிற்குச் செய்துள்ள பணிகள் பற்றி குறிப்பிட்டார்,

கழகக் கூட்டங்கள்

★

பத்தமடை

27—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: சு. வள்ளிநாயகம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

ச. வீரபாகு

★

பாபநாசம்

கீழ வீதியில்

28—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. வி. பதி

பேசுபவர்:

க. அன்பழகன்

★

நரசிங்கபுரம்

பிள்ளையார் கோவில் கீழ்புறம் விளையாட்டு மைதானத்தில்

28—5—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: என். கே. நல்லவாண்டு

பேசுவோர்:

அருண்மொழி

எம். பி. சுப்ரமணியம், எம்.எல்.ஏ.

எம். குப்புசாமி

பி. எம். ரெங்கசாமி

இரவு 10½ மணிக்கு, தோழர் கே. கோபால் தலைமையில் 'நச்சுக் கோப்பை' நாடகம் நடைபெறும்.

பொதுக்கூட்டம்

27—5—55 மாலை 7 மணிக்கு கணியூர், புதூர் மடத்தில், அழகிரி மன்றச் சார்பில், தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், வி. சண்முகநாதன், கே. சபாபதி ஆகியோர் பேசுவர்.

சென்னை 34-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

28—5—55 இரவு 8 மணிக்கு, சென்னை 34-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் இல்லத்தில் (குறளகம்) செயற் குழுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு, கழக 3-வது ஆண்டு விழா ஆகிய பிரச்சினைகள் குறித்து முடிவு செய்யப்படும்.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

28—5—55 மாலை 6 மணிக்கு சென்னை 46-வது வட்ட தி.மு.கழக நிர்வாகிகள் தேர்தல், கழக பணிமனையில், தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெறும்.

பாராட்டுக் கூட்டம்

28—5—55 மாலை 6 மணியளவில், மேற்படி கழக திடலில், சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்களுக்கு தோழர் தி. கு. இராசாபாதர் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். தோழர் அ. பொ. அரசு பேசுவார்.

ஆலந்தூர் தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

28—5—55 இரவு 8 மணிக்கு ஆலந்தூர் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழக இல்லத்தில் நடைபெறும்.

'தம்பி'—நாடகம்

28—5—55 இரவு 9½ மணிக்கு, கோணவட்டம் திருவள்ளுவர் அரங்கில், தோழர் சே. எல். கிருஷ்ணசாமி தலைமையில், புரட்சி நாடக மன்றத்தார் நடிக்கும் 'தம்பி' என்னும் நாடகம் நடைபெறும். தோழர்கள் முல்லை-சத்தி, அ. கருத்தோவியன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

'இன்பசேகரன்' — நாடகம்

27—5—55 இரவு 10 மணிக்கு, நாடழகானந்தல் அண்ணா அரங்கில், தோழர் ப. உ. சண்முகம் தலைமையில், நாடழகானந்தல் தி. மு. கழக நிதிக்காக, செங்காடு செந்தமிழ் நாடக மன்றத்தாரின் 'இன்பசேகரன்' என்ற நாடகம் நடைபெறும்.

'மிருகங்கள் அடைபடும் இடத்தில் மக்கள் வாழ்கின்றனர்!'

'இந்தக் கொடிய நிலைமை ஒழிவதற்கு உடனே பரிகாரம் காண வேண்டும்!'

சென்னை சேரி வாழ்வோர் நிலை குறித்து மத்திய மந்திரி

"ஒன்று அல்லது இரண்டு அறை அளவு மட்டும் உள்ள சாலைகள் அமைந்த காலனி ஒன்றிற்குச் சென்றிருந்தேன்; முரட்டு மிருகங்கள் மட்டுமே அடைத்து வைக்கப்படக்கூடிய அந்த இடங்களில் மக்கள் குடியிருப்பதைக் கண்ணுற்றேன்; ஒரு இடத்தில், சுமார் 60 குடும்பங்கள் மட்டுமே மிகச் சிரமத்துடன் குடியிருக்க முடியும்; ஆனல், அங்கு சுமார் 300 குடும்பங்கள், புளிமூட்டையை அடைப்பதுபோல் அடைக்கப்பட்டிருக்கின்றன; பார்ப்பதற்குக் கொடுமையான அந்தக் காட்சி என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது; உங்கள் சர்க்காரும், நகரசபையினரும், மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண முற்படுவர் என்று நம்புகிறேன்,"

—என்று, மத்திய அரசாங்க உதவி மந்திரி பி. என். தத்தார், சென்னை பெத்துநாய்க்கன்பேட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

சென்னையில் உள்ள சேரிகளின் பயங்கரமான நிலை கண்டு திடுக்கிட்ட மத்திய அரசாங்க உதவி மந்திரி பி. என். தத்தார், நகர சபை 'கமிஷனரிடம்' சேரிகளை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான திட்டத்தை தயாரித்து தாக்கல் செய்யுமாறு கூறியதாகத் தெரிகிறது.

தென்னிந்திய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அவர் சென்னைக்கு மீண்டும் ஜூன் 1-ந் தேதி வரும்போது, விரிவான திட்டத்தை தாக்கல் செய்வதாக, நகர சபை கமிஷனர் அறிவித்ததாகத் தெரிகிறது.

அண்மையில், நகரத்தில் உள்ள 250 சேரிகளையும் அபிவிருத்தி செய்வதற்காக ரூ 4.19 கோடி செலவில், நகரசபை, திட்டம் ஒன்று தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி, பாதித் தொகையை மானியமாகவும், பாதியைக் கடனாகவும் கேட்டதாகவும், ஆனல், மத்திய அரசாங்கம் பாதி தொகையைக்கூட மானியமாகத் தர முடியாதென வும், சேரி அபிவிருத்திக்கு கடன் மட்டுமே தரமுடியுமென கூறி விட்டதாகவும், தத்தாரிடம், நகர சபை கமிஷனர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

"மத்திய அரசாங்கம் பண உதவி செய்தாலொழிய நகரசபையால் சேரிகளை அபிவிருத்தி செய்வது சாத்தியமில்லை," என்றும் அவர் கூறியிருக்கிருராம்.

இந்தியைத் திணிக்கமாட்டார்களாம்!

மத்திய உதவி மந்திரி கூற்று

சென்னை, மே 24—

"அகில இந்திய உத்தியோகங்களுக்கு ஆள் எடுக்கும் பிரச்சினையில், தென்னாட்டு மக்களுக்கு எவ்வித துன்பமோ, இடையூறோ செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் இல்லை," என்று மத்திய உதவி மந்திரி பி. என். தத்தார் கூறிருக்கிருர்.

மேலும் அவர், சொன்னது:—

"இந்தி இன்னும் சின்னட்களில், இதர மொழிகளினும் வளமடைந்த தேசிய மொழியாக உருப் பெற்றுவிடும் என்று நம்புகிறேன்; எந்த ஒரு பகுதி மக்கள் மீதும் இந்தியைத் திணிக்க நாங்கள் விரும்பவில்லை."

"இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி வந்தாக வேண்டும்; என்றாலும், ஆங்கிலம் ஏதாவது ஒரு ரூபத்தில் இங்கு இருக்கத்தான் செய்யும்; குறிப்பாக சர்வதேச பிரச்சினைகளில் ஈடுபடும் பெரிய மனிதர்களின் உபயோகத்திற்கு ஆங்கிலம் வேண்டும்; எனவே, ஆங்கிலத்தை அறவே ஒழித்துவிடுதல் என்ற சேள்வியும் எழவில்லை."

"ஆச்சாரியார் இந்தி பற்றிக் குறிப்பிட்டிருப்பதை இந்திய சர்க்கார் அறிந்தே இருக்கிறது; மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஆச்சாரியாரைக் கலந்தாலோசிக்கப்படும்."

கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம்

சிரியா-எகிப்து-சவூதி அரேபியா நாடுகள் மேற்கொள்ளும்

இஸ்ரேல் ஆபத்தைச் சமாளிப்பதற்கும், தேசிய நலனை உத்தேசித்தும், சிரியா — எகிப்து — சவூதி அரேபிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய தாம் உறுதி பூண்டிருப்பதாக சிரிய பிரதமர் கூறியுள்ளார்.

தேர்தல் கூட்டத்தில் கலவரம் — மிளகு பொடி தூவினராம்!

கன்சர்வேடிவ் கட்சியினர் செய்கையாம்!

லண்டன், மே 24—

'நாகரீகம் மிகுந்த நாடு' என்று அழைக்கப்படும் பிரிட்டனில், தேர்தல் கூட்டத்தில் மிளகு தூவியும், கார் 'ஹாரன்'களை முழக்கியும் கலவரம் செய்யும் சம்பவங்கள் நடப்பது ஆச்சரியகரமானவைதான்!

இன்று, நார்போக் ஏனுமிடத்தில், தொழிற் கட்சி உறுப்பினர் இயானி மிக்கார்டோ பேசிய கூட்டத்தில், கன்சர்வேடிவ் கட்சி ஆதரவாளர்கள் மிளகு பொடி தூவி கலவரம் செய்தனராம்.

இரு கட்சியினருக்கும் இடையே தோன்றிய கைகலப்பை போலீசார் தடுத்து நிறுத்தினர் என்று தெரிகிறது.

திருமதி மேகன் லாயிட் ஜார்ஜ் பேசிய கூட்டமொன்றில், கார் 'ஹாரன்'களை ஒலித்து, கன்சர்வேடிவ் ஆதரவாளர்கள் குழப்பம் விளைவித்தனராம்.

கோவை செழியன்

சுற்றுப்பயணம்

மே 27: புலியகுளம்

28: குன்னூர், ஊட்டி

29: கோவை

30: கன்னிவாடி

31: கொடுமுடி

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

மே 26: ஆற்றூர்-திருவண்ணாமலை

28: சிதம்பரம்

29: மதுரை

31: பந்தநல்லூர்

மலாயா சமஸ்திடி தலைநகர தமிழ்க் கலை மன்றத் தலைவர்

திரு. எஸ்.ஏ.சுப்பையா

தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளையும், கலைக்கூடங்களையும், இதர சினிமா, நாடகம் போன்ற கலைநிறுவனங்களையும் காண தாயகம் வந்திருக்கிருர். அவர், தற்சமயம், சென்னை, இராயபுரம், தி. மு. கழக 'அறிவகத்'தில் தங்கியிருக்கிருர்.

கலைக் குழுக்களின் உரிமையாளர்களும், நிர்வாகிகளும், அவர் அறிந்துசெல்ல வந்திருக்கும் கலைச் சம்பந்தமான காரியங்களுக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தூத்துக்குடியில் வி. வி. டி. ஆரம்பப் பள்ளியை திறந்துவைப்பார்

"30-5-55 காலை 9 மணிக்கு, தூத்துக்குடி, ஆரோக்கியபுரத்தில், வி. வி. டி. நினைவு ஆரம்பப் பள்ளியை பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைப்பார்,"

என்று, நிர்வாகி தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிருர்.

மதுரை, கல்லுக்குடி நடராசன் நினைவுப் படிப்பக உறுப்பினர்கட்கு

28-5-55 இரவு 10½ மணிக்கு மதுரை, கல்லுக்குடி நடராசன் நினைவுப் படிப்பக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பொருள்: ஆண்டு விழா.

திருச்சி நகர தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

★

28-5-55 இரவு 10 மணிக்கு, திருச்சி, பெரியகடை வீதி தி. மு. கழகத்தில், திருச்சி நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம், கழக கழக வரவு-செலவு, மாநில மாநாடு நிதி, பொதுச்செயலாளர் வரவேற்பு ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும்.

தூத்துக்குடி தோழர்கட்கு!

★

"29—5—55 அன்று, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு கொடுக்கும் வரவேற்பு ஊர்வலம், சுமார் மூன்று மைல் சுற்றளவுள்ள 24 முக்கிய தெருக்கள் வழியாக செல்வதற்கு முடிவு செய்து, போலீஸ் அனுமதியும் பெற்று, 200 அலங்கார வளைவுகளும், 24 தெருக்களிலும் இடைவெளி இல்லாதபடி பந்தல்களும், தோரணங்களும் அலங்காரம் செய்து முடிந்தபின், இன்னும் பல தெருக்களிலுள்ள ஆர்வமிக்க தோழர்களின் அழைப்பை நிறைவேற்ற முடியாத நிலைமைக்கு மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

"அத்துடன் பொதுச்செயலாளருக்கு கொடுக்கும் தேநீர் விருந்து 600 கழகத் தோழர்களுக்குத்தான் ஏற்பாடு செய்து நுழைவுச்சீட்டு கொடுத்தாகிவிட்டது. மேற்கொண்டு நுழைவுச் சீட்டு இல்லையென்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்,"

என்று, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிருர்.

அறப்போர் தலைவரை சுட்டு வீழ்த்த போர்ச்சுக்கல் உத்தரவு

எல்லை முழுவதும் இராணுவ 'ஜபர்தஸ்து'

கவந்தவாடி, மே 25—

கோவா தேசிய காங்கிரஸ் தலைவர் பீட்டர் ஆல்வாரிஸ் என்பார் கோவாவில் எங்கேனும் காணப்பட்டால், அவரைச் சுட்டு வீழ்த்தும்படி இராணுவத்திற்கும், ஆயுதப் போலீசிற்கும் கோவா போர்ச்சுகீசிய அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதாம்.

நடைபெற்றுவரும் அறப்போருக்கு அவரே காரணகர்த்தர் என அந்த ஆதிபத்தியம் கருதுவதே இந்த உத்தரவிற்குக் காரணமாம்.

கோவா எல்லையில் வாழும் கிராமவாசிகள் அறப்போர் வீரர்களைப் பிடித்துத் தந்தால் தாராளமாக ரொக்கப் பரிசு வழங்குவதாக ஆசை காட்டப்படுகின்றனராம்.

மே 28-ந் தேதி போர்ச்சுக்கல் தேசியப் புரட்சி தினமென்றும், அன்று சர்க்கார் அலுவலகங்களில் மூவர்ணக்கொடி ஏற்றப்படுமென்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதை ஒட்டி, கலக்கமுற்றிருக்கும் போர்ச்சுக்கல் ஆதிபத்தியவாதிகள், சர்க்கார் மாளிகைகளைச் சுற்றிலும் ஆயுத தரித்த ஆப்பிரிக்கப் போலீசாரை நிறுத்தி வைத்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஊர் நாயகம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"முன்பிருந்த செயலாளரை நீக்கிவிட்டு, அவருக்கு எவ்வித மனத்தாங்கலுமின்றி வேறொருவரை பொதுச்செயலாளராக்குவதென்பது, ஒரு பெரிய இயக்கத்தில் சாதாரணமாக நடந்துவிடக் கூடியதா? சாமானியமான மாற்றமா?

"தோழர் நவரத்தினசாமி என்பவர், இலங்கையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு கடலில் நீந்திவந்த போது, கரையிலிருந்தோர் அவரை ஆச்சரியத்துடன் கேட்டார்களே— 'எப்படி நீந்தினீர்கள்? ஓய்ந்துவிடவில்லையா, உங்கள் கைகள்? கடல் அலைகள் உங்களைப் பயமுறுத்த வில்லையா?'—என்று!

"நவரத்தினசாமி நீந்தினர்— நாகசாமிகள் ஆச்சரியப்பட்டனர்; அதுபோலவே நாம் நீந்துகிறோம் —நானும்பக் கட்சியினரும் ஆச்சரியப்படுகின்றனர்;—'உண்மையாகவா நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டார்? எதிர்ப்பே இருக்கவில்லையா? ஏகமனதாகவா தேர்ந்தெடுத்தார்கள்?'—என்றெல்லாம் ஆச்சரியப்படுகின்றனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.